


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.2.2026) உயர் கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை சார்பில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ள சென்னை எழும்பூர் தமிழ்நாடு ஆவணக் காப்பக கட்டடம் மற்றும் 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கண்காட்சிக் கூடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 100 ஆண்டுகள் பழமையான அரிய ஆவணங்களை பாதுகாக்க ஜப்பானிய திசு முறையில் (Japanese Tissue) செப்பனிடும் பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் பி.கே. சேகர்பாபு, முனைவர் கோவி. செழியன், மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், உயர் கல்வித்துறை செயலாளர் முனைவர் பொ. சங்கர், தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை ஆணையர் திருமதி.சு. மலர்விழி, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் முனைவர் ச. விசாகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பல்வேறு விளையாட்டுகளுக்கு பயிற்சியாளர்களாக பணியாற்ற தேர்வாகியுள்ள 28 நபர்களுக்கு நேற்று முன்தினம் (19.2.2026) பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கரூரில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரைக் கூட்டம்!

# துரோகிகளுடன் புறவாசல் வழியாக வரும் பா.ஜ.க.வின் எண்ணம் நிறைவேறாது!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் – தயாநிதி மாறன் எம்.பி. பேச்சு!

கரூர், பிப். 21 –

கரூர் மாவட்டம், கரூர் சட்டமன்ற தொகுதியில், திராவிட மாடல் நல்லாட்சியின் மகத்தான சாதனைகளை பறைசாற்றும் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை கூட்டம், கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ் வரவேற்புரையாற்றினார். கரூர் மாவட்ட கழக செயலாளர், மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தலைமை வகித்து பேசினார். கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:



செந்தில் பாலாஜியின் ஆற்றலை 2019 நாடாளுமன்றத் தேர்தலில் பார்த்தோம். கொங்கு மண்டலத்தில் வெற்றி பெற வேண்டும் என தலைவர் அவர்கள் கட்டளையிட்டார்கள். தேர்தல் முடிவை எதிர்பார்த்து, கொரோனா காலம் தலைவர் அவர்களின் வீட்டில் அனைவரும் முக கவசம் அணிந்து அமர்ந்திருந்தோம். செந்தில் பாலாஜி வந்தார். நாம்தான் வெற்றி பெறுவோம் என உறுதி அளித்தார். அதன் பிறகு ஈரோடு இடைத்தேர்தல். அங்கு தான் செந்தில்பாலாஜியின் பணிகளை நேரில் பார்த்தேன். மிகவும் டப் என்றார்கள். ஆனால் தூங்காமல் வேலை செய்து வெற்றிக்கனியை பறிக்க செயல்பட்டார். தேர்தல் வேலை என்று வந்துவிட்டால் தூங்கவே மாட்டார்.

அவருக்கு எதிரியே பங்காளிகள் தான். எடப்பாடியோ நான்தான் பெரியவன். நான்தான் கட்சி, நான்தான் முதல்வர் என்ற எண்ணத்தில் அனைவரையும் மிரட்டிப் பார்த்தார். கழகம் வெற்றி பெற்றதைப் பொறுக்க முடியாமல், சீமை ஒழித்து வைத்து விட்டால் கல்லாமல் அன்று விடும் என்று நினைத்து எடப்பாடி, பாஜக மூலம் என்னென்ன அட்டூழியங்களை செய்ய முடியுமோ, அத்தனையையும் செய்து செந்தில் பாலாஜியை முடக்கினார். ஆனால் நான் வெளியே இல்லாவிட்டால் என்ன?. கழக தொண்டர்கள் இருக்கிறார்கள். நான் என்ன நினைக்கிறேனோ அதை அவர்கள் செய்வார்கள் என்று சொல்லி கழகத்திற்கு அமோக வெற்றியைத் தேடித் தந்தார்.

தன்னம்பிக்கை உடையவர்கள் கழகத்தினர். 2026 தேர்தல் களம் வருகிறது பார்க்கலாம் என களம் இறங்கி இருக்கிறார். அவரை முடக்க பார்த்தீர்கள் அல்லவா, இருங்கள். இன்னும் இரண்டு மாதம் தான் இருக்கிறது. கொங்கு மண்டலத்தை கழகத்தின் கோட்டையாக மாற்றி காட்டுவார். சில சமயம் கெட்டவர்கள் ஜெயிப்பதை போல தோற்றம் இருக்கும். அவர்கள் செய்கின்ற சூழ்ச்சியை பார்த்து அந்த எண்ணம் வரும். ஆனால் தன்னம்பிக்கை உடையவர்கள் தான் வெற்றி பெறுவார்கள். இப்போது பாருங்கள் ஒட்டு மொத்த கொங்கு மண்டலத்தையும் கழகத்தின் கோட்டையாக மாற்றிக் காட்டுவார்.

மகளிர் அனைவரையும் பார்க்கும்போது பொறாமையாக இருக்கிறது. ஆமாம் எங்களுக்கு எதுவும் இல்லை. ஆனால் உங்கள் அக்கவுண்டில் தான் டக்கு டக்கு என காசு வந்து சேர்ந்துள்ளது. ரூ.5ஆயிரம் உங்களுக்கு கிடைத்ததை நினைக்கும் போது பெருமையாக இருக்கிறது. எங்கள் தலைவர் சொன்னார் செய்தார். மக்கள் நம்பக்கூடிய ஒரே தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டா லின் அவர்கள் தான். அவர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்த மக்கள் முடிவு செய்து விட்டார்கள். ஆரம்பத்தில் மாதம் தோறும் ரூ. ஆயிரம் கொடுக்க முடியாது என்று சொன்னவர்கள் இப்போது 2000 தருவேன் என்கிறார்கள். ஆனால் சுப்ரீம் கோர்ட்டுக்கு போக பாஜக வக்கீல்கள் முயற்சி செய்தனர். மோடியும், அமித்ஷாவும் இந்த முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை அறிந்து 11 மணிக்கு தானே கோர்ட்டுக்கு போவாய். எட்டு முப்பது மணிக்கு அக்கவுண்டில் பணத்தை போடுகிறேன் என செய்து காட்டியவர். மு.க. ஸ்டாலின் அவர்கள் என்றால் சும்மாவா, யார் என்று தெரிகிறதா?.

இந்தத் திட்டத்தை கிண்டல் செய்துவிட்டு பாஜகவினர் அவர்கள் ஆளும் மாநிலங்களில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**திருட முடியாத ஒரே சொத்து!**

வஞ்சகம் சூழ்ச்சி செய்து எப்படியாவது தமிழ்நாட்டை பிடித்து விட வேண்டும் என முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு தேவை அடிமைகள் . துரோகத்தால் வெற்றி பெறலாம் என நினைக்கிறார்கள் நடக்காது. துரோகத்தால் தோல்வியடைந்த எடப்பாடி பாஜகவுடன் கூட்டணி இல்லை என்று கூறினார். சிறுபான்மை மக்களுக்கு எதிரான அனைத்து சட்டங்களையும் ஆதரித்து விட்டு அவர்களிடம் போய் மன்னிப்பு கேட்டார் ஆனால் மக்கள் தேர்தலில் வீழ்த்தினார்கள்.

வஞ்சகம் சூழ்ச்சி என எப்படியாவது தமிழ்நாட்டை பிடிக்க வேண்டும் என ஓடி வந்து முயற்சிக்கின்றார்கள் அவர்களுக்கு தேவை அடிமைகள். துரோகம் இருந்தால் போதும் வெற்றி பெற்று விடலாம் என நினைக்கிறார்கள். அது நடக்காது.

ஜெயலலிதா இறந்த பிறகு முதல்வராக எடப்பாடி தேர்வு செய்யப்பட்டார். அவரை தேர்வு செய்துவிட்டு திரும்பி பார்த்தார் சசிகலா . எடப்பாடியை காணவில்லை. காலில் விழுந்து கிடக்கிறார். அதே சசிகலாவை நீங்கள் யார்? எனக்கு யாரும் பதவி தரவில்லை? என முதுகில் குத்தினார் . ஜெயலலிதா செய்த ஊழல் காரணமாக சசிகலா சிறைக்கு அனுப்பப்பட்டார். சசிகலாவை ஒழித்து விட்டோம் என டெல்லியில் போய் காலில் விழுந்து ஆட்சியை தக்க வைத்துக் கொண்டார். உதய் மின் திட்டம், நீட் தேர்வு என எல்லாவற்றையும் ஆதரித்து அடுக்கடுக்கான துரோகங்களை செய்தார். மக்கள் எதை வேண்டுமானாலும் மன்னிப்பார்கள் துரோகத்தை மன்னிக்கவே மாட்டார்கள். சட்டமன்ற தேர்தலில் அதிமுக வை மக்கள் வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

இந்தி மொழியை நாம் எதிர்க்கவில்லை. இந்தி திணிப்பைத்தான் எதிர்க்கின்றோம். தேவைப்பட்டால் எந்த மொழியில் வேண்டுமானாலும் படிப்பார்கள். ஆந்திராவில் போய் வேலை செய்தால் வேறு வழி கிடையாது தெலுங்கை படிக்க வேண்டும். டெல்லியில் போய் வேலை செய்தால் இந்தியை தான் படிக்க வேண்டும். அதை படித்தால் யாரும் உயர்ந்தவரும் இல்லை படிக்காதவர் யாரும் தாழ்ந்தவரும் இல்லை. தமிழ் படித்த சுந்தர் பிச்சை உயர்ந்த பதவியில் இருக்கிறார். தமிழ் படித்த விஞ்ஞானிகள் ராக்கெட் தயாரிக்கிறார்கள். ஆனால் ஒரு மொழியை மட்டுமே படித்தவர்கள் என்ன செய்கிறார்கள். வேலைக்கு இங்கே வருகிறார்கள் அந்த அளவிற்கு வேலை வாய்ப்பு தமிழ்நாட்டில் தான் இருக்கிறது.

தமிழ்நாடு முன்னேற வேண்டும் இந்தியாவும் முன்னேற வேண்டும் என்பதுதான் நமது கொள்கை. இதை பொறுக்க முடியாமல் அதைத் தத்தான் துரோகிகளை அழைத்துக் கொண்டு புறவழியாக வந்து பாஜக முயற்சி செய்கிறது. இது சாதாரண தேர்தல் அல்ல. ஏ டீமில் அதிமுக பாஜக வருகிறது. பி டீமில் நான் தான் உத்தமன் என என்னென்னவோ கூறிக்கொண்டு உள்ளே ஒருவர் வருகிறார்.

இதை தலைமுறைநினைவு சரிக்கையோடு இருக்க வேண்டும். பொறுப்பு உங்கள் கையில், வாக்குப்பதிவு எந்திரத்தில் நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் அழுத்தும் போது டெல்லிக்கு ஷாக் அடிக்கும். அதை நீங்கள் செய்ய வேண்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான் மீண்டும் முதலமைச்சர் ஆவார்கள்.

இவ்வாறு தயாநிதி மாறன் பேசினார்.

கரூர் மாவட்டத்திற்கு ரூ.5 ஆயிரம் கோடியில் வளர்ச்சிப் பணிகள்கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ பேசியதாவது:

2026 சட்டமன்ற தேர்தலில் கரூர் மாவட்டத்தில் நான்கு தொகுதி களிலும் கடந்த தேர்தலை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் உதயசூரியன் வென்றது என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

சுதந்திரம் பெற்றது முதல் கரூர் மாவட்டத்திற்கு முதல் முறையாக ஐந்தாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வளர்ச்சி திட்ட பணிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தின் வாயிலாக கழகத்தினர் கழகம் வெற்றி பெற சபதம் ஏற்று செயல்படவேண்டும் .

இவ்வாறு அவர் பேசினார்.

### திருச்சி என்.சிவா எம்.பி சிறப்புரை!

# பாபநாசத்தில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பொதுக்கூட்டம்!

## சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தஞ்சாவூர், பிப். 21 –

தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



இந்திய கண்டத்தின் ஒப்பற்ற முதல்வராக விளங்கும், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களை மீண்டும் முதல்வர் பொறுப்பில் அரியணை ஏற்றிடும் வகையில் தஞ்சை வடக்கு மாவட்டத் திற்குட்பட்ட பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி. பங்கேற்கும் நிகழ்ச்சிகள் இன்று (21.02.2026 ) கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சிகளில் முன்னாள் – இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், சார்பு அணியினர், கழக பிரதிநிதிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் திரளாக பங்கேற்க வேண்டுகிறேன்.

காலை 09 மணிக்கு சுவாமி மலை கிட்டு பத்தர் சிலைக்கு மாலை அணிவித்தல், 9.5க்கு S.ராஜகோபால் நிர்வாகி சந்திப்பு சுவாமிமலை, 9.15க்கு சுவாமிமலை – ராகவன் சிற்பசாலை & பூம்புகார் சிற்பக்கலை கூடம் தொழிலாளர்கள் சந்திப்பு, 9.45க்கு நடராஜன் நிர்வாகி சந்திப்பு மேலகபிஸ்தலம், 10 மணிக்கு திரு ஆரூரன் சுகர்ஸ் லிமிடெட் ஐ.என்.டி.சி தொழிற்சங்க நிர்வாகிகள் சந்திப்பு கபிஸ்தலம், 10.30க்கு பாபநாசம் திருப்பாலைத்துறை தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தல், 11 மணிக்கு அய்யம்பேட்டை காந்தி சிலை, காமராஜர் சிலை & ஸ்ரீமத் வேங்கடராமண பாகவதர் சிலைக்கு மாலை அணிவித்தல், 11.30க்கு மெலட்டூர் சமுதாய மக்கள் சந்திப்பு, 11.55க்கு அம்மாபேட்டை ப.சிவசாமி மு.ஒன்றிய செயலாளர் சிலைக்கு மாலை அணிவித்தல், மதியம் 12 மணிக்கு தொகுதி முக்கியஸ்தர்கள் சந்திப்பு – தாஜ் ராயித் மஹால் அம்மாபேட்டை, 1.00 மணிக்கு மதிய உணவு கழக நிர்வாகிகளுடன் – அம்மாபேட்டை, மாலை 5.50 மணிக்கு பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தல், மாலை 6.00 மணிக்கு "தமிழ்நாடு தலைகுனியாது பொதுக்கூட்டம். பாபநாசம் கீழ வீதி. மேற்கண்ட யாவு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர் அம்பாள் எஸ்.எ.நந்தகுமார் இல்ல திருமண விழா!

## ஆ.இராசா எம்.பி., வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., முன்னிலை - கழக முன்னணியினர் வாழ்த்து!

திருவாரூர், பிப். 21 –

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், சென்னை மண்டலப் பொறுப்பாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா, கரூர் மாவட்டக் கழக செயலாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் கழக பொறியாளர் அணி துணைச் செயலாளர் அம்பாள் எஸ்.எ.நந்தகுமார் இல்லத் திருமண விழா நடைபெறவுள்ளது.



எஸ்.எ.நந்தகுமார் – சி.சுமதி புதல்வன் ந.விஷ்ருதா, ஈரோடு மாவட்டம், செங்கோடம்பாளையம் எம்.டி.ஈஸ்வரன் – சந்திரா ஈஸ்வரன் புதல்வன் ஈ.சந்தீப்குமரன் திருமண வரவேற்பு விழா இன்று (21.02.2026 – சனிக்கிழமை) மாலை 06.00 மணிக்கு மேல் குன்னத்தூர், பெருமாநல்லூர் ரோடு ஸ்ரீ சங்கர் மஹாலில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக துணைப்பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், சென்னை மண்டலப் பொறுப்பாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா, கரூர் மாவட்டக் கழக செயலாளர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்த மண விழாவில் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் மணமக்களை வாழ்த்தி வாழ்த்துரை வழங்குகிறார்கள். இதில் நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், முன்னோடிகள், அனைத்து கட்சித் தலைவர்கள், மாநில இன்னாள் முன்னாள் நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களை சேர்ந்த இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், திருப்பூர் தெற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தாராபுரம் சட்டமன்ற தொகுதி கழகப் பொறுப்பாளர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உடன்பிறப்புக்கள் மற்றும் ஆன்றோர், சான்றோர், உற்றார், உறவினர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.


## 22ஆம் ஆண்டு நினைவு நாள்



திருமதி
**தமிழரசி ஜெயராமன்**
நினைவு நாள் : 21.02.2026

**எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே**
**எங்களது இதயத்தில் நிலைத்து நிற்கும்**
**உன்னை எண்ணி எங்களது கண்ணீர் அஞ்சலியை**
**காணிக்கையாக்குகிறோம்.**

★★★

தந்தை - நினைவில் வாழும் **கோ.சி.மணி** முன்னாள் அமைச்சர்
தாய் - நினைவில் வாழும் **கோ.சி.கிருஷ்ணவேணி மணி**
கணவர் - **தி.ஜெயராமன்**
மகன் : டாக்டர் **ஜெ.குமணன்** M.D.,D.M (Oncology)
மருமகள் : டாக்டர் **கே.கண்மணி**
பேரன் : **நிலன் குமணன்** பேத்தி : **நிலா தமிழரசி**
மற்றும் குடும்பத்தினர் – ஆடுதுறை – தஞ்சை மாவட்டம்




புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளாளவிடுதி ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.14.50 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 14.02.2026 அன்று திறந்து வைத்தார். உடன், கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, முருகேசன், பூபதி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**திண்டிவனம் கோ.வெங்கட்ராமன்**
**பிப்ரவரி 21 (2013)**



**1974ஆம் ஆண்டு முதல் கழக வழக்கறிஞராக பணியாற்றி வந்தார்.**

**1989–ல் மாநிலங்களவை உறுப்பினராகவும் – 1996–ல் திண்டிவனம் மக்களவை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மத்திய அமைச்சராகப் பணியாற்றினார்.**

**பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இவர் கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், சட்ட எரிப்பு போராட்டம் போன்ற போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**